# மாரத்தான் போட்டி: 10,000 பேர் பங்கேற்பு

**சென்னை, ஜன. 6–**

சென்னை மெட்ரோ சார்பில், மாரத்தான் போட்டி, நேற்று நடத்தப்பட்டது. இதில், 10 ஆயிரம் பேர் பங்கேற்றனர்.

உடல்நலனை ஆரோக்கியமாக பராமரிப்பது தொடர்பான செயல்பாடுகளை ஊக்குவிக்கும் நோக்கில், மெட்ரோ ரயில் நிறுவனமும், சென்னை ரன்னர்ஸ் அமைப்பும் இணைந்து, நேற்று மாரத்தான்போட்டியைநடத்தின.

போட்டியை, நந்தனம், ஒய்.எம்.சி.ஏ., மைதானத்தில், தமிழக தொழில் துறை அமைச்சர் எம்.சி.சம்பத் கொடியசைத்து, துவக்கி வைத்தார்.

இதில், 10 கி.மீ., 22 கி.மீ., 32 கி.மீ., மற்றும் 42 கி.மீ., என, நான்கு பிரிவுகளாக போட்டி நடத்தப்பட்டது. 10 கி.மீ., பிரிவில், 100க்கும் மேற்பட்ட மாற்றுத்திறனாளிகள் பங்கேற்று அசத்தினர். நான்கு பிரிவுகளிலுமாக, ஆண்கள், பெண்கள் என, 10 ஆயிரம் பேர்பங்கேற்றனர்.

போட்டியில், 10 கி.மீ., ஓட்டம், தரமணியில் உள்ள பாலிடெக்னிக் கல்லூரி வரையும், மற்ற போட்டிகள் கிழக்கு கடற்கரை சாலை வரையும் நடத்தப்பட்டன.

போட்டிகளில் வெற்றி பெற்றோர், மெட்ரோ மற்றும் ரன்னர்ஸ் அமைப்பின் சார்பில், பரிசுகள் வழங்கி பாராட்டப்பட்டனர். மாரத்தான் ஓட்டத்தால் கிடைக்கும் நிதியை, மாமல்லபுரம் சாலையில் உள்ள, கழபதுார் ஏரியை துார் வாரும் பணிக்காக பயன்படுத்தப்படும் என, தெரிவிக்கப்பட்டது.

மாரத்தான் ஓட்டத்தில், பங்கேற்க வரும் பயணியருக்காக, நேற்று அதிகாலை, 3:00 மணியில் இருந்து, மெட்ரோ ரயில் இயக்கப்பட்டது.

போட்டியில் பங்கேற்க வாகனங்களில் வந்தோருக்கு, நேற்று பகல், 12:00 மணி வரை, மெட்ரோ ரயில் நிலையங்களில், கட்டணமின்றி இலவசமாக வாகனங்களை நிறுத்திவைக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.



■ சென்னை மெட்ரோ ரயில் நிறுவனமும், 'சென்னை ரன்னர்ஸ்' அமைப்பும் இணைந்து, நேற்று மாரத்தான் போட்டியை நடத்தின. அதில், பங்கேற்றவர்கள். இடம்: ஒய்.எம்.சி.ஏ., மைதானம், நந்தனம்.